**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு.R.சரவண பாபு, பி.ஏ,.எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**இந்து திருமணம் அசல் மனு எண்.144/2023**
**CNR.No.TNSA16-000973/2023**

கஸ்தூரி (எ) கிருஷ்ணமூர்த்தி ... மனுதாரர்

/ எதிர் /

ராணி ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 13.07.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. V. ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. L. கணபதி சுப்ரமணியம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.06.1988 ம் தேதி தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பூச்சூர் பெருமாள் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.06.1988 ம் தேதியில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பூச்சூர் பெருமாள் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் பயனாக உபயமனுதாரர்களுக்கு குழந்தைகள் ஏதுமில்லை என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு

உபயமனுதாரர்கள் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சாம்பள்ளி கிராமம், கருமலைக்கூடல் பகுதியில் வாடகை வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், அதன்பின்னிட்டு மனுதாரருடைய விலாசத்தில் வசித்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் திருமணமான நாளிலிருந்தே மனுதாரருடன் சண்டை சச்சரவில் ஈடுபட்டு வந்ததாகவும், மனுதாரர் பலமுறை காரணம் கேட்டபோதெல்லாம் எதிர்மனுதாரர் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி திட்டியதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரரை ஒரு பொருட்டாக மதிக்காமல் இருந்து வந்ததோடு பல்வேறு வகைகளில் ஆடம்பர செலவுகள் செய்துவந்ததாகவும், மனுதாரருடைய வயதாக தாய் தந்தையருக்குக்கூட எந்தவித பணிவிடைகளும் செய்வதில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரை உதாசீனப்படுத்தியும் கேவலப்படுத்தியும் ஒரு மனநோயாளிபோல நடந்துவந்ததாகவும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் வீண் சண்டை சச்சரவுகளில் ஏற்படுத்திக்கொண்டு தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், அதன்பிறகு மனுதாரர் பலமுறை எதிர்மனுதாரரை நேரில் அழைத்தும் போன்மூலம் அழைத்தும் எதிர்மனுதாரர் வரவில்லை என்றும், மாறாக எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூரில் அ.வ.எண்.125/2000 என்ற வழக்கினை ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்ததாகவும், பின்னிட்டு வழக்கானது சார்பு நீதிமன்றம் மேட்டூருக்கு அ.வ.எண்.9/2003 என்ற எண்ணாக மாற்றப்பட்டு, பின்னர் மேற்படி ஜீவனாம்ச வழக்கானது கடந்த 19.09.2003ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது வீட்டிலேயே இருந்துகொண்டு மனுதாரரை தனிமைப்படுத்தி, யாருடைய அறிவுரையினையும் ஏற்காமல், என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்றறியாமல் ஒரு சைக்கோ போல வாழ்ந்து வந்ததோடு, பல்வேறு காரணங்களை கூறி மனுதாரருடனான இல்லற வாழ்க்கையிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்து வருவதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரரை தன்னுடன் சேர்ந்து வாழவைக்க பல

முயற்சிகள் எடுத்ததாகவும், ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவிருப்பமில்லாமல் இருப்பதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வரும் காலக்கட்டத்தில் எதிர்மனுதாரர் சந்தோஷமாக இருந்துவருவதாகவும், இனியும் சேர்ந்து வாழ வாய்ப்பில்லாததால் வேறுவழியின்றி மனுதாரர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. எதிருரை சுருக்கம்:</u>**

மனு பொய்யானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல, எதிர்மனுதாரர் எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், இருவருக்கும் 27.06.1988ம் தேதி திருமணம் நடைபெற்றது உண்மை என்றும், மனுதாரர் தினக்கூலி வேலை பார்த்து வந்ததாகவும், அதன்பின்னிட்டு தமிழ்நாடு மின்வாரியத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் தன் வயதான தாய் தந்தையை கவனித்து கொண்டிருந்ததையும், உபயமனுதாரர்களுக்கு குழந்தை ஏதும் இல்லை என்பதாலும், மனுதாரர் ஜெயா என்ற பெண்ணை எதிர்மனுதாரருடன் திருமண பந்தம் நிலுவையில் இருக்கும்போதே 2ம் திருமணம் செய்துகொண்டதாகவும், அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர் மீது பல பொய் புகார்களை கூறி 2ம் மனைவியுடன் வாழ தொடங்கியதாகவும், பல பஞ்சாயத்து பேசியும் மனுதாரர் எதற்கும் உடன்படாத காரணத்தினால் எதிர்மனுதாரர் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் O.S. No.4/2003-ல் ஜீவனாம்சம்கேட்டு வழக்கு தொடர்ந்து அது 19.09.2003ல் தள்ளுபடி ஆனது என்றும், அதன்பேரில் சேலம் மாவட்ட முதன்மை நீதிபதி நீதிமன்றத்தில் A.S. No.15/2005-ல் எதிர்மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதாகவும், அதன்பேரில் மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் S.A. No.534/2006-ல் 2ம் மேல்முறையீடு தாக்கல் செய்து 17.02.2022ல் அது தள்ளுபடி ஆனது என்றும்,

மனுதாரர் மேற்படி சங்கதிகளை மறைத்து தனது பணி பதிவேட்டில் நாமினியாக இருந்த எதிர்மனுதாரர் பெயரை நீக்கி 2ம் மனைவி ஜெயா பெயரை சேர்க்க முயற்சி செய்ததால், எதிர்மனுதாரர் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. No.206/2000 என்ற எண்ணில் மனுதாரர் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய அதிகாரிக்கு எதிராக தன் பெயரை நாமினியில் இருந்து நீக்கக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தருமபுரி சார்பு நீதிபதி நீதிமன்றத்தில் H.M.O.P. No.80/2011-ல் விவாகரத்து வேண்டி வழக்கு தாக்கல் செய்து அதில் I.A. No.50/2013 இடைக்கால பொருளாதாரம் ரூ.5,000/- கேட்டு மனு செய்து அதை செலுத்தாத காரணத்தினால் 05.08.2015ல் H.M.O.P. No.80/2011 தள்ளுபடி ஆனது என்றும், மனுதாரர் தன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், R.E.P. No.32/2006 in O.S. No.4/2003ல் சார்பு நீதிபதி நீதிமன்றம் தருமபுரியில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேரவேண்டிய தொகைகளைப் பெற்றுவிட்டால் எதிர்மனுதாரரால் ஜீவனாம்ச தொகை வசூல் செய்ய முடியாமல் போய்விடும் என்பதால், R.E.P. No.80/2024-ல் மனு தாக்கல் செய்து அது விசாரணைக்கு நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளையும் மறைத்து விவாகரத்து மனுதாக்கல் செய்திருக்கிறார் என்றும், சட்டப்படி 2013ல் ஜீவனாம்சம் ரூ.5,000/- வீதம் உத்திரவாகி இதுவரை செலுத்தாத மனுதாரர் இம்மனு தாக்கல் செய்ய அருகதையற்றவர் என்றும். ஆகையால் தயவுசெய்து இம்மனுவை மனுதாரர் கோரியுள்ள பரிகாரத்தை பெற அவர்களுக்கு எந்தவித முகாந்திரமும் கிடையாது என்றும், மனுதாரரின் மனுவில் உண்மையோ நிலைக்கத்தக்க பொருண்மையோ கிடையாது என்றும், மனுதாரர் பொய்யான காரணத்தினை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார், எனவே மனு தள்ளுபடிக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.பிரச்சனை:**

மனுதாரர் கோரிய படி இந்து திருமண சட்டம் பிரிவு 13 (1)(i), 1(i–a), 1(i–b)–ன் கீழ் விவாகரத்து அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆய்விற்குட்பட்ட கருப்பொருள் ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 ஆக கருணாகர பட்டர் விசாரிப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, மனு ஆவணம், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

7. மனுதாரர் தன்னையே ம.சா.1 ஆக விசாரித்துள்ளார். ம.சா.1 தனது முதல் விசாரணையில் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 27.06.1988 ம் தேதியில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பூச்சூர் பெருமாள் திருக்கோவிலில் குலவழக்கப்படி இருதரப்பு பெற்றோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் பயனாக குழந்தை ஏதும் இல்லை என்றும், திருமணம் நடைபெற்றதிலிருந்து எதிர்மனுதாரர் மனுதாரரை தொடர்ந்து உடளவிலும், மனதளவிலும் பல்வேறு வகையில் கொடுமைப்படுத்தியதாகவும், அதனால் அவர்களுக்கிடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** மேலும் ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில் இருவருக்கும் உள்ள குடும்ப பிரச்சினையை நீதிமன்றத்திற்கு வெளியில் பேசி தீர்த்திக்கொண்டதாகவும், மனுதாரருக்கு பணி ஓய்வு கால ஊதியமாக பெறக்கூடிய தொகையில் ரூ.7,00,000/-ம் எதிர்மனுதாரருக்கு மின்சார துறை மூலமாக நேரடியாக வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்றும், மனுதாரருக்கு கிடைக்க கூடிய ஓய்வூதியத்தில் மாதம் ரூ.5,000/-ம் வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்றும், மேற்படி தொகையை மின்சார துறை மூலமாக நேரடியாக வழங்குவதில் மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** மேலும் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட எதிர்மனுதாரார் தனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் தனக்கும் மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை ஒப்பு கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் எ.ம.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் மனுதாரர் பணி ஓய்வு கால ஊதியமாக பெறக்கூடிய தொகையில், ரூ.7,00,000/-ம், மின்சார துறை மூலமாக நேரடியாக பெற்றுக்கொள்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும், மேலும் ஓய்வூதியத்தில் மாதம் ரூ.5,000/-ம் பெற்றுக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்றும், இருவருக்கும் ஏற்பட்ட பைசலின்படி மனுதாரருக்கு விவாகரத்து வழங்க யாருடைய தூண்டுதலும் இன்றி சம்மதிப்பதாகவும், மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், எதிர்கால ஜீவனாம்சம் மனுதாரரிடமிருந்து எந்த காலத்திலும் கோரபோவதில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** மேலே ஆராய்ந்த வகையில், மனுதாரரும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையிலும், தங்களுக்கு விவாகரத்து வழங்குவதில் ஆட்சேபணை இல்லை என்று

இருதரப்பிலும் ஒப்பு கொண்டுள்ள நிலையிலும், மேற்படி மனுதாரரும், எதிர்மனுதாரரும் இனி ஒன்றாக சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லாத நிலையிலும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்திமன்றம் கருதுகிறது.

**11.** மேலே ஆராய்ந்த வகையில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 27.06.1988 ம் தேதியில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பூச்சூர் பெருமாள் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 27.06.1988 ம் தேதியில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பூச்சூர் பெருமாள் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்தை இந்து திருமண சட்டம், 1955 பிரிவு 13 (1)(i), 1(i–a), 1(i–b)–ன் கீழ் ரத்து செய்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**13.** மேலும், மனுதாரரின் பணி ஓய்வு கால ஊதியத்தில் பெறக்கூடிய தொகையில் ரூ.7,00,000/–ம், மின்சார துறை மூலமாக நேரடியாக எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேலும், ஓய்வூதியத்தில் மாதம் ரூ.5000/–ம் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. செலவு தொகையை தரப்பினர்களே ஏற்று கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.SARAVANA BABU
Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர் தரப்பு சாட்சி:**

ம.சா.1 – திரு. கஸ்துாரி (எ) கிருஷ்ணமூர்த்தி

ம.சா.2 – கருணாகர பட்டர்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | அ.வ.எண்.125/2000 ன் வழக்குரை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | – | அ.வ.எண்.4/2003 ன் தீர்ப்பு | சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:**

எ.ம.சா.1 – திருமதி. ராணி

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் | நகல் |

R.SARAVANA BABU

Digitally signed by R.SARAVANA BABU

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**